# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Madurai**

**Case No. CC – 55/2019**

**Deposition of Witness for Prosecution : P.W. 2**

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : மொக்கமாயன் | Caste | : |
| Father/Husband Name | : சீனிபெரியகருப்பதேவர் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**(A1 present. A2, A3 Absent. Petition filed and Allowed)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 27.05.2024**

**முதல் விசாரணை**

நான் கோயிலாங்குளத்தில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 எனது மனைவி ஆவார். 1வது ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். எதிரி செல்வம் என்பவரை எனக்கு தெரியும். எதிரி தனலெட்சுமி சம்பவ சயமத்தில் அவர் கணவருடன் வந்திருந்தார். கடந்த 2018 ஆம் ஆண்டில் காலை 11.30 மணியளவில் எங்கள் தோட்டத்தில் எதிரிகள் ஆடுகளை கொண்டு வந்து மேய்த்தார்கள். அதை நான் கண்டித்தேன். ஜோதிபாசு, செல்வம் மற்றும் பெண் ஒருவர் பெயர் தெரியவில்லை மற்றும் அவரது கணவர் ஆகியோர் எதிரி செல்வம் மற்றும் ஜோதிபாசு ஆகியோர் கம்பால் என்னை வலது தோள்பட்டையில் அடித்துவிட்டார். எதிரி செல்வம் கட்டையால் என் தலையில் அடித்ததில் எனக்கு இரத்தக்காயம் ஏற்பட்டது. மருத்துவமனையில் 11 தையல் போட்டார்கள். இன்று தப்பித்துவிட்டாய் இன்னொருநாள் உன்னை பார்த்து கொள்கிறேன் என்று மிரட்டிவிட்டு சென்றார்கள். பின்னர் காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்துவிட்டு, உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு சென்றேன். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்து ஒரு வாரம் கழித்து போலீசார் என்னை விசாரித்தார்கள். எங்கள் தோட்டத்திற்கு வடக்கே கண்மாய் உள்ளது என்றால் சரிதான். கண்மாயில் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள் ஆடு மேய்ப்பார்கள். மேற்படி கண்மாய்க்கு செல்ல என் தோட்டத்தின் வழியாகதான் செல்லவேண்டும் என்றால் சரியல்ல. சுமார் ஒரு ஏக்கர் பருத்தி விதைத்திருந்தோம். காசிமாயன் மற்றும் தனலெட்சுமி ஆடு வளர்க்கவில்லை என்றால் சரியல்ல. எனது மருமகன் பாண்டி சம்பவ சமயத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தார் என்றால் சரிதான். புகாரை யார் எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. எனது மனைவிக்கு சம்பவத்தில் தோள்பட்டையில் காயம் ஏற்பட்டது. எனது மனைவி சிகிச்சை எதுவும் எடுக்கவில்லை. நானும் எனது மனைவியும் மோட்டார் ரூம் அருகே இருந்தோம். நான் மோட்டார் ரூமில் வேகமாக ஓடி வந்ததால், கீழே விழுந்ததில் எனக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. பருத்தி தோடத்தில் ஆடுகள் மேய்ப்பதாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். இரத்தம் படிந்த எனது சட்டையை போலீசர் வாங்கிகொண்டார்கள். நான் சொன்னதுபோல் போலீசார் விசாரணையிலும் கூறியுள்ளேன். தரிசு வழியாக ஆடுகள் கண்மாய்க்கு செல்வது பிடிக்காமல் எனது மருமகன் சார்பு ஆய்வாளர் என்பதால் அதை பயன்படுத்தி, எதிரிகள் மீது பொய் புகார் கொடுத்து, பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் சொன்ன விதத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Madurai**

**Case No. CC – 55/2019**

**Deposition of Witness for Prosecution : P.W. 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ராசாத்தி | Caste | : | |
| Father/Husband Name | : | மொக்கமாயன் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

**(A1 present. A2, A3 Absent. Petition filed and Allowed)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 27.05.2024**

**முதல் விசாரணை**

நான் கோயிலாங்குளத்தில் குடியிருந்து வருகிறேன். 1வது ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். 2வது எதிரி செல்வம் என்பவரை எனக்கு தெரியும். கடந்த 2018 அன்று நானும் எனது கணவரும் எங்கள் தோட்டத்தில் இருந்தபோது, எதிரி ஜோதிபாசு, செல்வம், காசிமாயன் மற்றும் அவரது மனைவி ஆகியோர் எங்களை அடித்தார்கள். காசிமாயன் என்னை கம்பால்அடித்தார். எதிரி செல்வம் எனது கணவரை கம்பால் வலது பக்க தலையில் அடித்து இரத்தம் வந்தது. பின்னர் உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில் கிசிச்சையில் சேர்தோம். இது சம்பந்தமாக நாங்கள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். அந்த புகார் மனு (**அ.சா.ஆ. 1**) ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

போலீசார் என்னை சம்பவம் நடந்து ஒரு வாரம் கழித்து விசாரித்தார். புகாரில் கையெழுத்து மட்டும் போட்டேன். என் மருமகன் போட சொன்னதால் போட்டேன். எனது மருமகன் பாண்டி சார்பு ஆய்வாளராக இருந்தார். என்னை காசிமாயன் அடித்ததாக சொன்னததை போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு

ஊசி போட்டு சிகிச்சை எடுத்துகொண்டேன். எங்கள் தோட்டத்திற்கு வடப்புறம் கண்மாய் உள்ளது. சம்பவம் நடந்த சமயத்தில் எங்களின் தோட்டத்தில் பருத்தி விதைத்திருந்தோம். சம்பவம் நடந்த போது மோட்டார் ரூமில் இருந்தோம். எனது கணவர் வயதானவர் என்பதால் அவர் தடுமாறி கீழே விழுந்ததால் மேற்படி சொன்ன காயங்கள் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோல் போலீசார் விசாரணையிலும் கூறியுள்ளேன். தரிசு வழியாக ஆடுகள் கண்மாய்க்கு செல்வது பிடிக்காமல் எனது மருமகன் சார்பு ஆய்வாளர் என்பதால் அதை பயன்படுத்தி எதிரிகள் மீது பொய் புகார் கொடுத்து, பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் சொன்ன விதத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.